தினமணி

## விதை உளுந்து பற்றாக்குறை

First Published : 23 Jan 2010 12:53:00 AM IST



கடலூர், ஜன. 22: கடலூர் மாவட்டத்தில் விதை உளுந்துக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு இருப்பதாக, விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

கடலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் சுமார் 1.5 லட்சம் ஏக்கரில் உளுந்து பயிரிடப்படுகிறது. காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் சம்பா நெல் அறுவடைக்கு 10 நாள்களுக்கு முன், நெல் வயல்களில் ஊடுபயிராக விதைத்து விடுவார்கள். ÷அறுவடைக்குப் பின் வயலில் உள்ள ஈரப்பதம் மற்றும் பனியால் 60 நாள்களுக்குள் உளுந்து விளைந்து விடும்.

÷கடந்த 3 ஆண்டுகளாக கடலூர் மாவட்டத்தில் உளுந்து நன்றாக விளைந்து இருந்த நேரத்தில் பலத்த மழை பெய்து உளுந்து பயிர்கள் முற்றிலும் சேதம் அடைந்தன. இதனால் இந்த ஆண்டு உளுந்து விவசாயத்துக்கு நல்ல வாய்ப்பு இருந்தும் விவசாயிகளிடம் உளுந்து விதை கையிருப்பு இல்லை.

÷எனவே அரசு உளுந்து விதையைக் கொள்முதல் செய்து, வேளாண் விரிவாக்க மையங்களில் வைத்து இருக்க வேண்டும் என்று ஒரு மாதத்துக்கும் மேலாகக் கோரி வருகிறார்கள்.

÷ஆனால் வேளாண் விரிவாக்க மையங்களில் போதுமான அளவுக்கு உளுந்து விதை இருப்பு இல்லை என்று விவசாயிகள் புகார் தெரிவிக்கிறார்கள்.

÷கடலூரில் வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) எஸ்.நடராஜன் தலைமையில் நடந்த, மாவட்ட விவசாயிகள் குறைகேட்கும் கூட்டத்தில் இப்பிரச்னை எழுப்பப்பட்டது.

÷அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டமைப்பின் கடலூர் மாவட்டத் தலைவர் வெங்கடபதி, மாவட்ட விவசாயத் தொழிலாளர் சங்கச் செயலாளர் ரவீந்திரன், கூட்டமைப்பின் மாவட்ட அமைப்பாளர் கார்மாங்குடி வெங்கடேசன், பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ரவீந்திரன் ஆகியோர் இதுகுறித்துப் பேசியது:

இந்த ஆண்டு 110 டன் உளுந்து விதை கடலூர் மாவட்டத்துக்குத் தேவைப்படும். ஆனால் வேளாண் விரிவாக்க மையங்களில் 7 டன் உளுந்து விதைதான் கையிருப்பில் உள்ளதாக வேளாண் அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

உளுந்துத் தட்டுப்பாடு வரும் என்று ஒரு மாதத்துக்கும் மேலாகக் கூறி வருகிறோம். வேளாண்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது கையிருப்பில் உள்ள டி.ஐ.யூ.-1 மற்றும் வம்பன் உளுந்து ரகங்கள் டெல்டா பாசனப் பகுதி நிலங்களுக்கு பொருத்தமானதாக இல்லை. ஏ.டி.டி. 3 ரக உளுந்துதான் டெல்டா பாசனப் பகுதிகளுக்கு பொருத்தமான ரகம்.

எனவே இந்த ரக உளுந்து விதைகளை கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். காலம் கடந்து கொள்முதல் செய்வதால் விவசாயிகளுக்குப் பயன் இல்லை. ÷கடலூரில் தற்போது உளுந்து விதை கிலோ ரூ. 110 ஆக தனியார் கடைகளில் விற்கிறார்கள்.

காவிரி டெல்டா பகுதிகளுக்கு போதிய உளுந்து விதையை தமிழக வேளாண் துறை விநியோகிக்காததால், தமிழகத்தின் உளுந்து உற்பத்தி பாதிக்கும் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இதற்கு பதில் அளித்த மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) நடராஜன், வேளாண் இணை இயக்குநர் இளங்கோவன் ஆகியோர், விவசாயிகளுக்குத் தேவையான விதை உளுந்து கொள்முதல் செய்து வழங்கப்படும் என்று உறுதி அளித்தனர்.

### மாநில அளவிலான வேளாண் கண்காட்சி திண்டுக்கல்லில் இன்று துவக்கம்

First Published : 23 Jan 2010 01:09:17 AM IST

திண்டுக்கல், ஜன. 22: திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம் சார்பில் மாநில அளவிலான வேளாண் கண்காட்சி சனிக்கிழமை தொடங்குகிறது.

கண்காட்சியில் மத்திய அரசு நிறுவனங்கள், ஏற்றுமதி நிறுவனங்கள், வேளாண் துறை சார்ந்த மாநில அரசு நிறுவனங்கள், வேளாண் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், வேளாண் இடுபொருள் உற்பத்தி செய்யும் பல்வேறு தனியார் நிறுவனங்கள் பங்குகொண்டு கண்காட்சி அரங்குகளை அமைத்துள்ளனர்.

திண்டுக்கல் டட்லி மேல்நிலைப் பள்ளியில் சனிக்கிழமை முதல் செவ்வாய்க்கிழமை வரை காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை கண்காட்சி நடைபெறும்.

வேளாண் விஞ்ஞானிகள், நிபுணர்கள் கண்காட்சியில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவும், விவசாயிகளுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு பதில் அளிக்கவும் உள்ளனர்.

கண்காட்சியினை மாநில வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் இ. பெரியசாமி திறந்துவைத்து உரை ஆற்றவுள்ளார். எனவே விவசாயிகள், பொதுமக்கள் இக்கண்காட்சியினைப் பார்வையிட்டு பயனடைய வேண்டும் என திண்டுக்கல் ஆட்சியர் மா. வள்ளலார் கேட்டுக் கொண்டுள்ளார்.

### மேட்டூர் அணை நீர்த்தேக்கப் பகுதியில் உழவுப் பணி துவக்கம்

First Published : 23 Jan 2010 12:10:59 AM IST

மேட்டூர், ஜன.22: மேட்டூர் அணையின் நீர்த்தேக்கப் பகுதியில் விவசாயிகள் உழவுப் பணிகளைத் தொடங்கினார்கள்.

மேட்டூர் நீர்தேக்கம் சுமார் 60 சதுர மைல் பரப்பளவு கொண்டது. மேட்டூர் அணை நிரம்பினால் ஒகேனக்கல் வரை தண்ணீர் தேங்கி கடல்போலக் காட்சியளிக்கும். நீர்த்தேக்கம் கட்டப்பட்டபோது தண்ணீர் தேங்கு பகுதிகளில் இருந்த கிராமங்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டன. அந்த கிராமமக்கள் தங்களின் விவசாய நிலங்களை விட்டு வெளியேறினார்கள்.

நீர்த்தேக்கத்தில் தண்ணீர் குறையும் போது விவசாயிகள் தங்கள் நிலங்களில் மீண்டும் விவசாயத்தை தொடங்குவார்கள். தற்ப்போது மேட்டூர் அணையின் நீர்மட்டம் மளமளவென குறைந்து வருகிறது. இதனால் பண்ணவாடி சேத்துக்குழி, கோட்டையூர்,நாகமரை கீரைக்காரணூர் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் உழவுப்பணிகளை தொடங்கி உள்ளனர்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்

First Published : 23 Jan 2010 12:10:24 AM IST

சேலம், ஜன.22: மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 80.55 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1194 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது.

அணையிலிருந்து விநாடிக்கு 7,999 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 42.50 டி.எம்.சி.

### பொழுதுபோக்கிற்காக விவசாயிகள் கூட்டம் நடத்தவில்லை

First Published : 23 Jan 2010 12:00:00 AM IST

விழுப்புரம், ஜன. 22: விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்வு கூட்டத்தில் விவசாயிகளின் பிரச்னைகளுக்கு சரியாக பதில் அளிக்காத அலுவலர்களைப் பார்த்து, பொழுது போக்குக்காக இங்கு கூட்டம் நடத்தவில்லை என்று மாவட்ட வருவாய் அலுவலர் சி.கதிரவன் எச்சரிக்கை விடுத்தார்.

÷விவசாயிகள் குறைதீர்வு கூட்டத்தில் பெறப்பட்ட 102 மனுக்களில் 90 மனுக்களுக்கு பதில் பெறப்பட்டது. 12 மனுக்கள் நிலுவையில் உள்ளன. விரைவில் அவற்றுக்கும் பதில் பெறப்படும் என்று வேளாண்மைத்துறை இணை இயக்குநர் ராமலிங்கம் தெரிவித்தார்.

÷இதைத் தொடர்ந்து கூட்டத்துக்கு தலைமை வகித்த மாவட்ட வருவாய் அலுவலர் சி.கதிரவன் சில பிரச்னைகள் குறித்து பல்வேறு அரசு அலுவலர்களிடம் கேள்வியெழுப்பினார். ஆனால் உரிய அலுவலர்கள் வராமல், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள் என கூட்டத்துக்கு வந்திருந்ததால் சரியான பதில் அளிக்க இயலவில்லை.

÷எனவே கோபமடைந்த அவர், "இங்கு பொழுதுபோக்குக்காக வருகிறீர்களா? ஒவ்வொரு மாதமும் நாங்கள் அழைத்து பேசுவோம், நீங்கள் ஆள் மாற்றி மாற்றி இசை நாற்காலிபோல் வந்து அமர்ந்துவிட்டு போவீர்கள். மனுக்களுக்கு பதில் சொல்வது யார்?

இன்று வந்துள்ள அலுவலர்கள் இன்றைய மனுக்கள் மீது திங்கள்கிழமைக்குள் பதில் அளிக்க வேண்டும். கடமைக்கு இங்கு வந்து செல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது; செயல்பட வேண்டும். வறட்சி நிவாரணப் பணிகள் மூலம் விவசாயிகளுக்கு நலன்செய்ய விரும்பி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதை முறையாக பயன்படுத்தி விவசாயிகள் நிதியை திரும்ப செலுத்த வேண்டும். அப்போதுதான் மேலும் செயல்படுத்த முடியும் என்றார்.

÷தொடர்ந்து விவசாயிகள் தங்கள் பிரச்னைகள் குறித்து கூறியது:

÷கீழ்கொடியூர் ஏரிக்கரையில் ஓட்டை விழுந்து 10 ஆண்டுகளாகிறது. அதை சரி செய்யாததால் தண்ணீர் தேங்க முடியாத நிலை உள்ளது. ராதாபுரம், சிற்றேரி-ஒட்டேரி இடையே உள்ள 5 ஏக்கரில் கரும்பு, உளுந்து பயிர்கள் மழையால் சேதமடைந்துள்ளன. அவற்றிற்கு இழப்பீடும், சேதத்தை தவிர்க்கும் நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.

விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த 4 கோட்டாட்சியர்களும், வட்டாட்சியர்களும் இந்த கூட்டத்துக்கு வருவதில்லை, அவர்கள் வந்தால்தான் உரிய நடவடிக்கை எடுக்க முடியும். இதனால் எங்களுக்கு நீதி கிடைப்பதில்லை.

ஓங்கூரில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை, இதனால் 10 கிராம மக்கள் மலைவாழ் மக்கள் போலவே மருத்துவ வசதிக்கு சிரமப்படுகின்றனர். ஓங்கூர் ஆற்றில் தடுப்பணை கட்ட வேண்டும்.

÷விவசாயிகளுக்கு உரம் பற்றாக்குறையாக உள்ளது. கூட்டுறவுத்துறை மூலம் ஒருமுறை வரவழைத்து விற்பனை செய்தார்கள், அதோடு நின்றுவிட்டது. அதனை தொடர்ந்து செய்ய வேண்டும்.

÷விவசாயத்துக்கு ஆள் பற்றாக்குறை ஏற்படுவதால் அறுவடைக் காலங்களில் நூறுநாள் வேலை திட்டத்தை நிறுத்த வேண்டும்; அல்லது அங்கு வழங்கப்படும் ஒருநாள் கூலி எவ்வளவோ அதனை நாங்கள் டி.டி.யாக எடுத்துத் தருகிறோம். அறுவடைக்கு ஆள்களை அனுப்பி வையுங்கள் என்றனர்.

÷இதற்கு பதிலளித்த வருவாய் அலுவலர், இது அரசின் கொள்கை முடிவு, இதில் ஏதும் செய்ய இயலாது என்று தெரிவித்து, விவசாயிகளின் மற்ற கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

÷கூட்டத்தில் கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளர் மலர்விழி, மின்வாரிய மண்டல செயற்பொறியாளர் நெப்சாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

÷முன்னதாக ரூ.8 லட்சம் மதிப்பில் இரண்டு நெல் அறுவடை எந்திரங்களையும், ரூ.85 ஆயிரம் மானிய உதவியில் 11 மின்மோட்டார்களையும் விவசாயிகளுக்கு வருவாய் அலுவலர் சி.கதிரவன் வழங்கினார்.

**தாவரங்களின் பயன்பாடு குறித்த ஆய்வுகள்அதிகரிக்க வேண்டும்**

First Published : 23 Jan 2010 03:18:29 AM IST
Last Updated : 23 Jan 2010 09:52:19 AM IST

ஈரோடு, ஜன. 22: மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் பயன் அளிக்ககூடிய தாவரங்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் என்று பாரதிதாசன் பல்கலைக்கழக கலை, அறிவியல் துறை முன்னாள் டீன் கே.வி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

தேசிய அளவிலான உயிரி தொழில்நுட்பவியல் கருத்தரங்கு ஈரோடு, சிஎன் கல்லூரியில் வெள்ளிக்கிழமை தொடங்கியது. கோவை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குநர் என்.ராமமூர்த்தி கருத்தரங்கினை தொடங்கி வைத்தார்.

உயிரி தொழில்நுட்பத்தின் தேவை மற்றும் இதன் நவீன தொழில்நுட்பம் குறித்து கே.வி.கிருஷ்ணமூர்த்தி பேசியது:

÷பல்லுயிரிப் பெருக்கம் மற்றும் உயிரி தொழில்நுட்பவியல் ஆய்வுகள் இரண்டும் இணைந்து செயல்பட வேண்டும். மரபணு மாற்று ஆய்வுகளில் ஈடுபடுவதை காட்டிலும் மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு பயன் அளிக்ககூடியதும்

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத 70 ஆயிரம் தாவரங்கள் குறித்த உயிரி தொழில்நுட்பம் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். மரபணு மாற்றம் குறித்த கட்டுப்பாடற்ற ஆய்வுகள் தவிர்க்கப்பட வேண்டும். இந்த ஆய்வுகள் தொடர்ந்து அதிகரித்துவரும் பட்சத்தில் பல்லுயிர் பெருக்கம் பெருமளவில் பாதிக்கப்படும் என்றார்.

கல்லூரி முதல்வர் ஆர்.பாஸ்கரன், தாவரவியல் துறை தலைவர் பி.பொன்னுசாமி, கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர் எஸ்.சரவணபாபு மற்றும் பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த தாவரவியல், விலங்கியல் துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

**ஈரோட்டில் இன்று மரபணுமாற்ற விதைகள் குறித்த கலந்துரையாடல்**

First Published : 23 Jan 2010 03:19:46 AM IST

Last Updated : 23 Jan 2010 09:52:04 AM IST

ஈரோடு, ஜன.22: தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் மரபணு மாற்ற விதைகளும், இந்திய உணவுப் பாதுகாப்பும் என்ற தலைப்பில் விஞ்ஞானிகள் பங்கேற்கும் கலந்துரையாடல் கூட்டம் ஈரோடு சம்பத்நகர் கொங்கு கலையரங்கில் சனிக்கிழமை மாலை நடைபெறுகிறது.

புதுதில்லி விஞ்ஞான பிரச்சார் அமைப்பின் முதன்மை அறிவியல் அலுவலர் டி.வி.வெங்கடேஷ்வரன், மதுரை காமராஜர் பல்கலைக்கழக உயிர்த் தொழில்நுட்பத் துறை பேராசிரியர் எஸ்.கிருஷ்ணசாமி ஆகியோர், பி.டி. கத்தரி உள்ளிட்ட மரபணு மாற்ற விதைகள் குறித்தும், அவற்றின் எதிர்காலச் சிக்கல்கள், சவால்கள், தேவை குறித்தும் பேசுகின்றனர். ஏற்பாடுகளை தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் என்.மணி, செயலர் டி.ராமசாமி மற்றும் நிர்வாகிகள் செய்துள்ளனர்.

**விவசாயத் தொழிலாளர் நலவாரியத் தலைவர் பங்கேற்கும் ஆய்வுக் கூட்டம்**

First Published : 23 Jan 2010 01:11:59 AM IST

தேனி, ஜன. 22: தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியத் தலைவர் பங்கேற்கும் ஆய்வுக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜனவரி 25-ல் நடைபெறுகிறது.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர், விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம் 2006-ன் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திங்கள்கிழமை (ஜன.25) காலை 10 மணியளவில் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. இதில் வாரியத் தலைவர் டாக்டர் கே.பி. ராமலிங்கம் தலைமைவகித்து, நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

வாரிய இணைத் தலைவர் கு.செல்லமுத்து மற்றும் அலுவலர்கள் பங்கேற்கின்றனர்.

தேனி மாவட்ட ஆட்சியர் பூ. முத்துவீரன் முன்னிலை வகிக்கிறார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பிருந்தாதேவி, சமூகப் பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர், மாவட்ட உறுப்பினர்கள், சமூகப் பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர்கள் பங்கேற்க உள்ளதாக ஆட்சியர் பூ.முத்துவீரன் தெரிவித்துள்ளார்.

**தமிழகத்தில் தேசிய கடலோர மேலாண்மைக் கழகம்**

First Published : 23 Jan 2010 01:58:49 AM IST

விருதுநகர், ஜன. 22: தமிழகத்தில் தேசிய கடலோரப் பகுதி மேலாண்மைக் கழகம் தொடங்கப்படும். இதற்கு சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தை மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ளது. இக் கழகத்தை நிறுவுவதற்கு ரூ. 217 கோடி நிதியை அரசு தருகிறது என்று இப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மன்னர் ஜவகர் தெரிவித்தார்.

விருதுநகருக்கு வெள்ளிக்கிழமை வந்திருந்த அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

நம் நாட்டில் கடலோரப் பகுதி மேலாண்மைக்காக உலக வங்கி ரூ. 1,500 கோடி நிதியுதவி செய்கிறது. இதைக் கொண்டு தேசியக் கடலோரப் பகுதி மேலாணமைக் கழகங்களை நிறுவ நான்கு மாநிலங்களை மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ளது.

குஜராத், ஒரிசா, மேற்கு வங்கம், தமிழகத்தில் மேலாண்மைக் கழகங்கள் நிறுவப்படவுள்ளன. தமிழகத்தில் பல்வேறு கல்வி நிறுவனங்ளைப் பரிசீலித்து, முடிவில் அண்ணா பல்கலைக்கழகத்திடம் அப் பொறுப்பை மத்திய அரசு ஒப்படைத்துள்ளது. இதற்காக ரூ. 217 கோடி நிதியை ஒதுக்குகிறது.

அண்ணா பல்கலைக்கழகம், பிஎஸ்என்எல் நிறுவனம் ஆகியவை மொபைல் கம்யூனிகேஷன் குறித்த சான்றிதழ் படிப்பை கடந்த ஏப்ரலில் தொடங்கின.

இதன் மூலம் மாநில அளவில் பொறியியல் இறுதியாண்டு படிக்கும் மாணவர்கள் 5,000 பேருக்கு பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இதற்காக 5 நாள்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரையில் 800 மாணவர்கள் படித்துள்ளனர். ஏப்ரல் மாதம் இறுதிக்குள் இப் பயிற்சிக்கான இலக்கு பூர்த்தி செய்யப்படும் என்றார் துணைவேந்தர்.

**வைகையில் பாசனநீர் திறக்கக் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

First Published : 23 Jan 2010 01:08:39 AM IST

பரமக்குடி,ஜன.22: வைகையில் தண்ணீர் திறக்கக் கோரி விவசாயிகள் சங்கம் மற்றும் கூத்தன் கால்வாய் பாசன விவசாயிகள் சார்பில் பரமக்குடி பஸ் நிலையம் முன்பு வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் எம்.முத்துராமு தலைமை வகித்தார்.

துணைச் செயலாளர் உ.களஞ்சியம், ஊராட்சி மன்றத் தலைவர்கள் சண்முகம், வேலுச்சாமி, காந்திமதி, பால்பாண்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணைச் செயலாளர் ஐ.ஜெயராஜ் வரவேற்றார்.

கூத்தன் கால்வாய் மூலமாக பாசனநீர் பெறும் 40 கண்மாய்களில் விவசாயத்துக்கு போதிய தண்ணீர் இல்லை. இதனால் கூத்தன் கால்வாய்க்கு வலது பிரதான கால்வாய் வழியாக பாசனநீர் கொடுக்க முடியாததால் இந்த கண்மாய்களுக்கு சமரனை மூலமாக உரிய பாசனநீர் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

மேலும், கூத்தன் கால்வாயை மராமத்து செய்து சிமெண்ட் சுவர் அமைத்திடவும், துணைக் கால்வாய்களைத் தூர்வாரக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலக் குழு உறுப்பினர் ஆர்.ஞானவாசகம், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் டி.கே.சிறைமீட்டான் ஆகியோர் சிறப்புரையாற்றினர். துணைத் தலைவர் எம்.கருப்பையா நன்றி கூறினார்.

### நெற்பயிரில் புகையான் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த யோசனை

First Published : 22 Jan 2010 11:14:21 AM IST

திருவாடானை,ஜன.21: திருவாடானை தாலுகா ஆர்.எஸ். மங்கலம் பகுதியில் நெற்பயிரில் புகையான் நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் உதவி இயக்குநர் முகம்மது அப்துல் நசீர் யோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:: திருவாடானை தாலுகா ஆர்.எஸ். மங்கலத்தில் தமிழகத்தின் 2-வது பெரிய கண்மாய் உள்ளது. இப்பகுதியில் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெல் விவசாயம் நடைபெற்று வருகிறது. வாட் புயல் காரணமாக நல்ல மழைபெய்து விவசாயம் நல்ல செழிப்புடன் உள்ளது.

இந்நிலையில், தற்போது சீதோஷ்ண நிலை மாறி கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இத் தருணத்தில் நெற் பயிர்களை புகையான் நோய்த் தாக்கும் வாய்ப்பு உள்ளது. புகையான் தாக்கிய வயல்களில் உடனடியாக தண்ணீரை வடித்து பயிர்களை சால் சாலாகப் பிரித்து விடவேண்டும். போதிய சூரிய வெளிச்சம், காற்றோட்டம் கிடைக்கும் போது நோய்த் தாக்குதல் குறையும். அதன்பிறகு உரம் இடக்கூடாது.

பூச்சியைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு மோனோகுரோடாபாஸ் 500 மில்லி அல்லது குளோரிபைரிஸ் 500 மில்லி அல்லது அசியேட் 350 மில்லி மருந்தினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் மூலம் பயிரின் தூர்ப் பகுதியில் தெளிக்க வேண்டும். இந்த மருந்து ஆர்.எஸ் மங்கலம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் 50 சதவீத மானியத்தில் வழங்கபட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

தினமலர்

### சர்க்கரை விலை 12 சதவீதம் வரை குறைய வாய்ப்பு:நிதி மற்றும் விவசாயத்துறை அமைச்சர் அறிவிப்பு

ஜனவரி 23,2010,00:00 IST



சர்க்கரை விலையை கட்டுப்படுத்த, வெளிநாடுகளிலிருந்து சர்க்கரையை இறக்குமதி செய்ய உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது."துறைமுகத்திற்கு, 1.2 மில்லியன் டன் சர்க்கரை வந்துள்ள நிலையில், மீதமுள்ள

சர்க்கரையும் விரைவில் வந்து விடும்; எனவே, சர்க்கரையின் விலை 12 சதவீதம் வரை குறையும்' என, மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி மற்றும் விவசாயத்துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்தனர்.அறிவிப்பு வந்து ஒரு வாரமாகியும், வெளி மார்க்கெட்டில் சர்க்கரை விலை குறையவில்லை. சர்க்கரை விலையைக் குறைக்க, வியாபாரிகளை மத்திய அரசு வலியுறுத்தியதால், மொத்த விலையில் குவிண்டாலுக்கு 150 ரூபாயும், சில்லரை விலையில் கிலோ இரண்டு ரூபாயும் குறைந்துள்ளது.

ஜனவரி 2009ல், 20 ரூபாய்க்கு விற்பனையான சர்க்கரை, கடந்த வாரம் 46 ரூபாய்க்கு விற்கப்பட்டது. சர்க்கரை விலை உயர்வால், மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.தமிழகம் மற்றும் வடமாநிலங்களில் பெய்த மழையால், கரும்பு விளைச்சல் குறைந்துள்ளது. மத்திய, மாநில அரசு விவசாயத் துறையின் கணக்கின்படி, நடப்பாண்டு கரும்பு விளைச்சல் 50 சதவீதமே உள்ளது.தமிழகம் மற்றும் உத்தர பிரதேச விவசாயிகள், கரும்பின் விலையை அதிகரிக்க, போராட்டத்தில் ஈடுபட்டனர். விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, கரும்பு விலையை அரசு அதிகரித்தால், சர்க்கரை விலை மேலும் உயரும் வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.தற்போது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா சர்க்கரையின் கொள்முதல் விலை, கடந்த ஆண்டை விட 20 சதவீதம் அதிகரித்துள்ளது.

சுத்திகரிக்கும் செலவையும் சேர்த்தால், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரையின் விலையை எட்டும். எனவே, வரும் காலத்தில், சர்க்கரை உற்பத்தி அதிகரித்தால் தான், சர்க்கரை விலையில் சரிவு ஏற்படுமென வியாபாரிகள் கூறி வருகின்றனர்.இருந்தாலும், வெளிநாட்டிலிருந்து சர்க்கரை இறக்குமதி செய்வதாக மத்திய அரசு தெரிவித்துள்ளதை தொடர்ந்து, வெளி மார்க்கெட்டில் சர்க்கரை விலை சற்று குறைந்துள்ளது.

சேலம் செவ்வாய்பேட்டை சர்க்கரை வியாபாரி சங்கரராமன் கூறியதாவது:வரலாறு காணாத விலை ஏற்றத்தை, சர்க்கரை சந்தித்துள்ளது. சில மாதம் முன், அதிக விலை கொடுத்து வாங்கி வைத்திருக்கும் வியாபாரிகள், தற்போது ஏற்பட்ட விலை குறைவால் நஷ்டத்தை சந்திக்க வேண்டியுள்ளது.சர்க்கரையை வெளிநாடுகளில் இருந்து மத்திய அரசு இறக்குமதி செய்தாலும், உள்நாட்டு விலைக்கு சமமாகவே அதன் விலை உள்ளது. சர்க்கரை விலையின் நிலையற்ற தன்மை காரணமாக, வியாபாரிகளுக்கு அச்சமே ஏற்படுகிறது.அன்றைய தின விற்பனைக்கு மட்டுமே சில்லரை வியாபாரிகள், சர்க்கரையை கொள்முதல் செய்வதால், மொத்த விற்பனை நிலையங்கள் பாதிக்கப்பட்டுள் ளன.
இவ்வாறு சங்கரராமன் கூறினார்.-நமது சிறப்பு நிருபர்-

### தரம் குறைந்த வரவால் மிளகாய் வற்றல் விலை வீழ்ச்சி

ஜனவரி 23,2010,02:57



மேட்டூர்: கொளத்தூர் சந்தையில், மிளகாய் விரைவில் காய, வெந்நீரில் வேக வைத்து, காய வைத்த தரம் குறைந்த மிளகாய் வற்றல் வரவால், விலை வீழ்ச்சியடைந்துள்ளது. சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்தில் 1,500க்கும் அதிகமான ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது. கொளத்தூர் மிளகாய் தரமுடன் இருப்பதால், அதிக விலையாக இருந்தாலும் வெளியூர், வெளிமாவட்ட வியாபாரிகள், சந்தையில் வாங்கிச் செல்வர். ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் துவங்கும் மிளகாய் சீசன், தற்போது தாமதமாக ஜனவரியில் துவங்கியுள்ளது. 2008ல், ஒரு கிலோ

மிளகாய் வற்றல் 90 ரூபாய்க்கும், 2009ல், 78 ரூபாய்க்கும் விற்பனையானது. ஆனால், இந்த ஆண்டு, முதல் ரகம் 68 முதல் 74 ரூபாயாகவும், இரண்டாம் ரகம் 60 முதல் 65 ஆகவும், மட்ட ரகம் 28 முதல் 31 ரூபாயாகவும் உள்ளது. விலைவாசி ஏறிவரும் நிலையில், இரு ஆண்டுகளாக மிளகாய் வற்றல் விலை குறைந்து வருவதால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

விலை சரிவு குறித்து வியாபாரிகள் கூறியதாவது: கோவை, ஈரோடு, சேலம் மாவட்டத்திலுள்ள வியாபாரிகள், மிளகாய் கொள்முதல் செய்ய வருகின்றனர். மிளகாய் வற்றல் சீசன் துவங்கி, இரு வாரங்களுக்கு பிறகே, தரமான மிளகாய் வற்றல் விற்பனைக்கு வரும். செடியில் பழுத்த மிளகாயை பறித்து, 15 முதல் 20 நாள் காய வைத்தால், தரமாக இருக்கும். விவசாயிகள் பலர், மிளகாய் விரைவில் காய, வெந்நீரில் வேக வைத்து, காய வைக்கின்றனர்; இதன் மிளகாய் வற்றல் தரம் குறையும். சீசன் துவக்கத்தில் தரம் குறைந்த மிளகாய் வற்றல் வரவால், விலையும் குறைவாக உள்ளது. சில வாரங்களில், தரமான மிளகாய் வற்றல் வரத் துவங்கியதும், விலை அதிகரிக்கும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

### புதிய அரிசி வரத்தால் விலை குறைய வாய்ப்பு

ஜனவரி 23,2010,02:55



ஈரோடு: 'அரிசி மார்க்கெட்டுக்கு புதிய அரிசி வரத்து துவங்கியுள்ளதால், அரிசி விலை குறைய வாய்ப்புள்ளது' என, வியாபாரிகள் தெரிவித்தனர். ஈரோடு பி.பி.அக்ரஹாரத்தில் வியாழக்கிழமை நடக்கும் அரிசி சந்தையில் கொடுமுடி, ஈரோடு, வெள்ளகோவில், பெருந்துறை உள்ளிட்ட பகுதியை சேர்ந்த அரிசி ஆலை உரிமையாளர்கள் நேரடியாக அரிசி விற்பனை செய்கின்றனர். ஈரோடு மாவட்டத்தில் காலிங்கராயன் பாசனப் பகுதியில் சில வாரங்களுக்கு முன் நெல் அறுவடை பணி முடிந்தது. எல்.பி.பி., பாசன பகுதியில் நெல் அறுவடை துவங்கி தீவிரமாக நடந்து வருகிறது. சில வாரங்களுக்கு முன் அறுவடை செய்யப்பட்ட நெல், அரவை செய்யப்பட்டு நடப்பாண்டு அரிசி சந்தைக்கு வரத்தானது. சந்தையில் ஐ.ஆர்.-20, கோ-36 ஆகிய ரகங்கள் புதிய அரிசி வரத்தானது. ஐ.ஆர்.20 அரிசி 75 கிலோ மூட்டை 1,400 ரூபாய், கோ-36 அரிசி 1,450 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கர்நாடகா டீலக்ஸ் பொன்னி 2,650 முதல் 2,700 ரூபாய், தமிழ்நாடு பி.பி.டி., பொன்னி 2,350 முதல் 2,400 ரூபாய், அதிசயப்பொன்னி (புதிய ரகம்) 1,700 முதல் 1,800 ரூபாய், அதிசயப் பொன்னி (பழையரகம்) 1,800 முதல் 1,900 ரூபாய், ஏ.டி.டி.-36 (பழைய ரகம்) 1,600 முதல் 1,700 ரூபாய், புதியது 1,500 முதல் 1,550 ரூபாய், இட்லி அரிசி 1,650 முதல் 1,700 ரூபாய்க்கு விற்கப்பட்டது. அரிசி சந்தைக்கு புதிய அரிசி வரத்தாவதால் இனி அரிசி விலை குறையும் என வியாபாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

அரிசி வியாபாரி ஒருவர் கூறியதாவது: தமிழகம் முழுவதும் டிசம்பர் மாதத்தில் நெல் அறுவடை பணி நடக்கிறது. நெல் அரவை செய்து, ஜனவரி மாதத்தில் அரிசி சந்தைக்கு புதிய ரக அரிசிகள் வரத்தாகும். நடப்பாண்டில் அறுவடை செய்யப்பட்ட ஐ.ஆர்.,20, கோ-36 ரக அரிசி வரத்தாகி உள்ளது. சில வாரங்களில் மற்ற ரக புதிய அரிசியும் அதிகளவில் வரத்தாகும் என்பதால், அரிசி விலை குறைய வாய்ப்புள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

**'மினரல் வாட்டர்' தொழிற்சாலை அமைவதற்கு விவசாயிகள் எதிர்ப்பு**

பொள்ளாச்சி : வறட்சியான விவசாய பகுதியில் "மினரல் வாட்டர்' தொழிற்சாலை அமைக்க அனுமதி வழங்ககூடாது என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்திலுள்ள கொல்லபட்டி காளியாபுரத்தை சேர்ந்த விவசாயிகள், ஆர்.டி.ஓ., விடம் அளித்த மனு: கொல்லபட்டி காளியாபுரம் முழுக்க முழுக்க விவசாயம் சார்ந்த பகுதியாகும். பருவமழை எதிர்பார்த்தபடி பெய்வதில்லை. கிணறு மற்றும் ஆழ்குழாய் பாசனத்தை நம்பியே விவசாயிகள் உள்ளனர். இந்நிலையில், இப்பகுதியில் தனியார் நிறுவனம் "மினரல் வாட்டர்' தொழிற்சாலை அமைக்கிறது. இதற்காக, பெரியளவில் 2 ஆழ் குழாய் கிணறுகள் அமைத்துள்ளனர். இதிலிருந்து தண்ணீரை உறிஞ்சி எடுத்து தொழிற்சாலையை நடத்தும் போது, சுற்றுப் பகுதியில் நிலத்தடி நீர் ஆதாரம் பாதிக்கப்படும். இதன் மூலம், கிராமத்தில் குடிநீர் ஆதாரமும், விவசாய பகுதிகளின் நீர் ஆதாரமும் பாதிக்கப்படும்.ஒவ்வொரு ஆண்டும் மார்ச் முதல் மே மாதம் வரை கடுமையான வறட்சி நிலவும், தென்னை மரங்களை காப்பாற்ற விவசாயிகள் போராடி வருகிறோம். பல ஆண்டுகளாக பருவமழையும் பெய்யாமல் பொய்த்திருப்பதால் குடிநீர் கூட கிடைப் பதில்லை.னவே, "மினரல் வாட்டர்' தொழிற்சாலை அமைவதை தடுத்திட வேண்டும். இவ்வாறு, மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**புதிய அரிசி வரத்தால் விலை குறைய வாய்ப்பு**

ஈரோடு: "அரிசி மார்க்கெட்டுக்கு புதிய அரிசி வரத்து துவங்கியுள்ளதால், அரிசி விலை குறைய வாய்ப்புள்ளது' என, வியாபாரிகள் தெரிவித்தனர். ஈரோடு பி.பி.அக்ரஹாரத்தில் வியாழக்கிழமை நடக்கும் அரிசி சந்தையில் கொடுமுடி, ஈரோடு, வெள்ளகோவில், பெருந்துறை உள்ளிட்ட பகுதியை சேர்ந்த அரிசி ஆலை உரிமையாளர்கள் நேரடியாக அரிசி விற்பனை செய்கின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் காலிங்கராயன் பாசனப் பகுதியில் சில வாரங்களுக்கு முன் நெல் அறுவடை பணி முடிந்தது. எல்.பி.பி., பாசன பகுதியில் நெல் அறுவடை துவங்கி தீவிரமாக நடந்து வருகிறது. சில வாரங்களுக்கு முன் அறுவடை செய்யப்பட்ட நெல், அரவை செய்யப்பட்டு நடப்பாண்டு அரிசி சந்தைக்கு வரத்தானது.

சந்தையில் ஐ.ஆர்.-20, கோ-36 ஆகிய ரகங்கள் புதிய அரிசி வரத்தானது. ஐ.ஆர்.20 அரிசி 75 கிலோ மூட்டை 1,400 ரூபாய், கோ-36 அரிசி 1,450 ரூபாய்க்கு விற்கப்பட்டது.கர்நாடகா டீலக்ஸ் பொன்னி 2,650 முதல் 2,700 ரூபாய், தமிழ்நாடு பி.பி.டி., பொன்னி 2,350 முதல் 2,400 ரூபாய், அதிசயப்பொன்னி (புதிய ரகம்) 1,700 முதல் 1,800 ரூபாய், அதிசயப் பொன்னி (பழையரகம்) 1,800 முதல் 1,900 ரூபாய், ஏ.டி.டி.-36 (பழைய ரகம்) 1,600 முதல் 1,700 ரூபாய், புதியது 1,500 முதல் 1,550 ரூபாய், இட்லி அரிசி 1,650 முதல் 1,700 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

அரிசி சந்தைக்கு புதிய அரிசி வரத்தாவதால் இனி அரிசி விலை குறையும் என வியாபாரிகள் எதிர்பார்க்கின்றனர்.அரிசி வியாபாரி ஒருவர் கூறியதாவது: தமிழகம் முழுவதும் டிசம்பர் மாதத்தில் நெல் அறுவடை பணி நடக்கிறது. நெல் அரவை செய்து, ஜனவரி மாதத்தில் அரிசி சந்தைக்கு புதிய ரக அரிசிகள் வரத்தாகும். நடப்பாண்டில் அறுவடை செய்யப்பட்ட ஐ.ஆர்.,20, கோ-36 ரக அரிசி வரத்தாகி உள்ளது. சில வாரங்களில் மற்ற ரக புதிய அரிசியும் அதிகளவில் வரத்தாகும் என்பதால், அரிசி விலை குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**கட்டுப்பாடற்ற மரபணு மாற்ற ஆய்வால் ஆபத்து**

ஈரோடு: உயிர்தொழில் நுட்பவியல் துறையில் எதிர்கால சவால்கள் மற்றும் வளர்ச்சி தொடர்பான தேசிய அளவிலான இரண்டு நாள் கருத்தரங்கம் ஈரோடு சி.என்., கல்லூரியில் நேற்று துவங்கியது. கோவை மண்டல

கல்லூரி கல்வி இணை இயக்குநர் ராமமூர்த்தி துவக்கி வைத்தார். பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் பேசியதாவது:

பல்லுயிரிப் பெருக்கமும், உயிரிதொழில் நுட்பவியல் ஆய்வும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படவேண்டும். நாம் மரபணுமாற்று ஆய்வு தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைவிட, மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு பயன்தரக்கூடிய சுற்றுச்சூழலுக்கு உபயோகமான 70 ஆயிரம் தாவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வது அவசியம்.

மேலும் மரபணு மாற்றம் குறித்த கட்டுப்பாடற்ற ஆய்வுகள் தவிர்க்கப்பட வேண்டும். அவ்வாறு முடியாத பட்சத்தில், அந்த ஆய்வுகள் பல்லுயிர்ப் பெருக்கத்தை கடுமையான அளவில் பாதிக்கும். இவ்வாறு அவர் பேசினார். சி.என்., கல்லூரி தாவரவியல் துறைத்தலைவர் பொன்னுசாமி வரவேற்றார். கல்லூரி முதல்வர் பாஸ்கரன் முன்னிலை வகித்தார். பேராசிரியர் சரவணபாபு நன்றி கூறினார்.

**துவரை விளைச்சல் குறைவு விலை அதிகரிக்க வாய்ப்பு**

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் தாலுகா பகுதியில் 500 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட துவரை செடிகளில் விளைச்சல் குறைந்துள்ளதால், கடந்தாண்டை விட விலை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கிருஷ்ணராயபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட பஞ்சப்பட்டி, புனவாசிப்பட்டி, லட்சுமணப்பட்டி, வேங்காம்பட்டி, வயலூர், குளத்தார் மற்றும் பாப்பாகப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் 500 ஏக்கர் பரப்பளவில் துவரை செடி பயிரிடப்பட்டுள்ளது.

துவரை செடிகள் நன்றாக வளர்ந்து வந்த நிலையில் பருவம் மாறி பெய்த மழையினால் பூ பிடித்த நிலையிலிருந்த செடிகள் அனைத்தும் உதிர்ந்து போய், காய் பிடிக்காமல் போனது. எதிர்பார்த்த அளவு துவரைக் காய் வளர்ச்சி இல்லாததால், விளைச்சல் வெகுவாக குறைந்ததுள்ளது. துவரை செடிகள் நன்றாக வளர்ந்திருந்தால், அந்த பருவத்தில் ஒரு ஏக்கரில் 300 கிலோ அளவுக்கு விளைச்சல் கிடைக்கும். ஆனால், தற்போது விளைச்சல் குறைந்து, ஏக்கருக்கு 100 கிலோ அளவுக்கே மகசூல் கிடைக்குமென கூறப்படுகிறது. கடந்தாண்டு 75 கிலோ துவரை மூடை இரண்டாயிரத்து 500 ரூபாய் முதல் மூன்றாயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது விளைச்சல் குறைவாக உள்ளதால் விலை உயர்வு ஏற்பட வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**வேளாண் துறை முன்னேறினால் இந்தியா வல்லரசு நாடாகும் : பல்கலை டீன் தகவல்**

மதுரை : ""இந்தியாவில் விவசாயத்தை முன்னேற்றினால் பாதிப்பிரச்சனை குறைந்து வல்லரசு நாடாகும்," என, மதுரை காமராஜ் பல்கலை டீன் டேவிட்அமிர்தராஜன் தெரிவித்தார். மதுரை பாத்திமா கல்லூரியில், உலகப் பொருளாதார சரிவு நிலை குறித்த கருத்தரங்கு நடந்தது.
கருத்தரங்கில் அவர் பேசியதாவது: உலகப்பொருளாதாரத்தின் சரிவு நிலை என்பது புதிதல்ல. 1930 ல் நடந்த உலகப்போரிலிருந்தே உலகப் பொருளாதாரத்தின் நிலை மந்தமாக இருந்துள்ளது. இந்த பண வீக்கம் 2000 ல் இருந்து காணப்பட்டாலும், 2007ல் தான் மோசமான நிலைஅமெரிக்கா மூலம் வெளிப்பட்டது.
பணத்தட்டுப்பாடு வந்தபின்னும், டயோட்டோ கம்பெனியின் பங்குச்சந்தை புள்ளிகளில் சரிவுக்கு பின் தான் உலகப் பொருளாதாரம், சரிவு நிலையை நோக்கி போய் கொண்டு இருப்பதை கண்டுபிடிக்க முடிந்தது. இந்த தாக்கம் இந்தியாவில் பாதிப்பை ஏற்படுத்தினாலும், 2010 ல் குறைய வாய்ப்புள்ளது. 2011 ல் வளர்ச்சி நிலையை நோக்கி முன்னேறி 2020 ல் இந்தியா ஒரு வல்லரசு நாடாக ஆகிவிடும். நம் நாட்டைப் பொறுத்தவரையில் விவசாயத்துறையை முன்னேற் றினாலே பாதிப்பிரச்சனை குறைந்து வல்லரசு நாடாகிவிடும் என்றார்.
அமெரிக்காவைச் சார்ந்த திட்ட ஒருங்கிணைப்பாளர் மேகன் ஹேன்டர்சன், உற்பத்தி மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் காரிபிரான்ட்லி, இயக்குனர் குழு மேலாண்மை டெக்ஸாஸ் ஆஸ்லேகிரேரிவாஸ் பொருளாதார சரிவு குறித்துப் பேசினர்.
பேராசிரியை ஆனந்தி வரவேற்றார். கல்லூரி முதல்வர் பாத்திமா தலைமை வகித்தார். செயலாளர் எஸ்தர்மேரி

முன்னிலை வகித்தார். திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலை பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி, அண்ணாமலை பல்கலை பேராசிரியர் செல்வராஜன், கொச்சின் அறிவியில் மற்றும் தொழில்நுட்ப பல்கலை பேராசிரியை மீராபாய், அருளானந்தர் கல்லூரி பேராசிரியர் ஆலமர், கோவை பி.எஸ்.ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி பேராசிரியர் மோகனசுந்தரம், பேராசிரியர் ஜமால்முகம்மது கலந்து கொண்டு பேசினர். பேராசிரியை ரெஜினாமேரி நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி**

நன்னிலம் : நன்னிலம் அருகே நாடாகுடியில் விவசாயிகளுக்கு நெல் விதை உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நடந்தது.வேளாண் துணை இயக்குனர் கபிலன் தலைமை வகித்து பேசுகையில், விவசாயிகள் நெல் விதை உற்பத்தி தொழில்நுட்பத்தை கற்றுக்கொள்ள வேண்டும். சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும் என்றார். விதைச்சான்று அலுவலர் இளங்கோவன் நெல் விதை உற்பத்தி, விதைப்பண்ணை அமைத்தல், விதை சுத்திகரிப்பு செய்தல் போன்ற தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சியளித்தார். வேளாண் அலுவலர் வீரமணி, பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சியளித்தார்.முகாமில் 200 விவசாயிகள் கலந்து கொண்டனர்.வேளாண் உதவி இயக்குனர் சத்தியமூர்த்தி வரவேற்றார். துணை அலுவலர் நடராஜன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை நன்னிலம் வட்டார வேளாண் உதவி அலுவலர்கள் மணி, வீரமணி, பழனிவேலு, சிங்காரவேலு, விதை உதவி அலுவலர்கள் சண்முகசுந்தரம், பிரபாகரன் ஆகியோர் செய்திருந்தனர்.

**செம்மை நெல் சாகுபடியில் ஏக்கருக்கு 61 மூட்டை வேளாண் உதவி இயக்குனர் தகவல்**

பள்ளிபாளையம்: "நடப்பு ஆண்டில் செம்மை நெல் சாகுபடி திட்டத்தில் ஒரு ஏக்கருக்கு 61 மூட்டை அறுவடை செய்து விவசாயி ஒருவர் சாதனை படைத்துள்ளார்' என, வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

பள்ளிபாளையம் வட்டாரத்தில் நடப்பு ஆண்டில் 1,800 ஹெக்டேர் பரப்பில் செம்மை நெல் சாகுபடி திட்டத்தின் கீழ் ஒற்றை நாற்று நடவு முறையை விவசாயிகள் ஆர்வத்துடன் பின்பற்றுகின்றனர்.ஒரு ஏக்கருக்கு 3 கிலோ விதை மட்டுமே பயன்படுத்தி ஒரு நாற்றினை சதுர நடவு முறையில் மார்க்கர் என்ற நடவு அடையாளமிடும் கருவி மூலம் நடவு செய்தனர்.

களைகளை கோனோவீடர் என்ற கருவி மூலம் நடவு செய்த 10ம் நாள் முதல் 4 முறை 10 நாட்கள் இடைவெளியில் வயலிலேயே மிதித்துவிட்டனர். ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 50 இடங்களிலும், தேசிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 100 இடங்களிலும் செயல்விளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டன. மார்க்கர் கருவி 150, கோனோவீடர்கள் 150 மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

செம்மை நெல் சாகுபடி திடல்களில் உற்பத்தி தூர்கள் 60 முதல் 100 வரை இருந்தன. கதிர்களில் மணிகள் சராசரியாக 150 முதல் 250 மணிகள் இருந்தன. பூச்சி நோய் தாக்குதல் இதர வயல்களைவிட செம்மைநெல் சாகபடியில் மிகக்குறைவாகவே இருந்தது. நெல் அறுவடை துவங்கியுள்ள நிலையில், தெற்குபாளையம் தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினரும், கிராம விவசாயியுமான நடனசபாபதி, தனது செம்மை நெல் சாகுபடி வயலில் ஒரு ஏக்கரில் 61 மூட்டை பெற்று சாதனை படைத்துள்ளார்.

விவசாயி நடனசபாபதி கூறுகையில், "கடந்த ஆண்டு 25 சென்டில் மட்டுமே செம்மை நெல் சாகுபடி செய்தேன். நல்ல மகசூல் கிடைத்ததால், இந்த ஆண்டு ஒரு ஏக்கரில் ஒற்றை நாற்று நடவு முறையை பின்பற்றினேன். வேளாண் அதிகாரிகளின் ஆலோசனை கேட்டு மார்க்கர் நடவு அடையாளம் இடும் கருவியை வைத்து சதுர நடவு முறையில் நட்டேன். அதிக தூர் பிடித்தது. பூச்சி நோயும் குறைவாகவே இருந்தது.

அரசின் திட்டங்களில் செம்மை நெல் சாகுபடி திட்டம் நல்ல திட்டமாகும். அதை அனைத்து விவசாயிகளும் பின்பற்றினால் அதிக மகசூல் பெறுவது உறுதி' என்றார். அவரை போலவே மற்ற செம்மை நெல் சாகுபடி விவசாயிகளும் அதிக மகசூல் பெற்று வருவதாக தெரிவிக்கின்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**27, 28ல் கெண்டை மீன் வளர்ப்பு பயிற்சி முகாம்**

புதுக்கோட்டை : புதுகை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் வரும் 27, 28ம் தேதிகளில் கெண்டை மீன் வளர்ப்பு பயிற்சி முகாம் நடக்க உள்ளது.இதுகுறித்து கால்நடை பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மைய தலைவர் ரிச்சர்டு ஜெகதீசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு@ பயிற்சியில் கெண்டை மீன் வளர்ப்பதற்கு குளம் அமைப்பு, மீன் குஞ்சு இருப்பு செய்யும் முன் குளம் தயாரித்தல், தீவன மேலாண்மை, நோய் தடுப்பு முறைகள் மற்றும் விற்பனை வாய்ப்புகள் பற்றி விளக்கி கூறப்பட உள்ளது. பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் புதுகை அண்டக்குளம் சாலையில் உள்ள கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் வரும் 27ம் தேதி காலை 10 மணிக்கு தங்களது பெயர்களை பதிவு செய்துகொள்ள வேண்டும். மேலும் விபரங்களுக்கு 04322-271443 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் என்று கூறியுள்ளார்.

**புகையான் நோயால் பாதித்த பயிருக்கு இழப்பீடு புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டத்தில் கோரிக்கை**

புதுக்கோட்டை: "புதுக்கோட்டை மாவட்டத்தில் புகையான் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நெற் பயிருக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கவேண்டும்' என மாவட்ட நிர்வாகத்துக்கு டெல்டா பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
புதுக்கோட்டையில் மாவட் ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடந்தது. டி.ஆர்.ஓ., ராகவன் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குனர் ராஜூ உட்பட அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர். கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:
**முத்துக்குமரன் (விவசாயி):** விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தின்போது ஒவ்வொரு முறையும் போதிய அளவு நெல் விதைகள், பயறுவகை விதைகள், எண்ணெய் வித்து விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக எழுத்துமூலம் தகவல் தெரிவிக்கப்படுகிறது. ஆலங்குடி தாலுகா பகுதிகளில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் உரிமம் பெற்ற தனியார் விற்பனை மையங்களில் விதைகள் இருப்பு இல்லை என மறுத்துவருகின்றனர்.
**ராகவன்(டி.ஆர்.ஓ.,):** ஆலங்குடி தாலுகா பகுதிகளில் விவசாயிகளுக்கு தேவையான விதைகள் தட்டுப்பாடின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
**முத்துராஜ்(விவசாயி):** மண்புழு உரம் உற்பத்தி செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவி பெற்றுத்தரவேண்டும்.
**ராஜூ(வேளாண் இணை இயக்குனர்):** மண்புழு உரம் உற்பத்தி செய்ய முன்வரும் விவசாயிகள் அனைவருக்கும் மானியத்துடன் கூடிய கடனுதவி பெற்றுத்தரப்படும்.
**பாலாண்டார்(விவசாயி):** விவசாயிகள் கூட்டத்தில் எழுப்பப்படும் கோரிக்கைகள் அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காக உள்ளது. விவசாயிகளின் சூழ்நிலைகளை நன்கு உணர்ந்து அதிகாரிகள் மனசாட்சியுடன் நடந்துகொள்ளவேண்டும்.
**டி.ஆர்.ஓ.,:** இது தவறான குற்றச்சாட்டு. விவசாயிகளின் கோரிக்கை கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
**தனபதி(விவசாயி):** விவசாய பம்பு செட்டுகளுக்கு நாள்தோறும் குறைந்தபட்சம் 12 மணி நேரமாவது மும்முனை மின்சாரம் வழங்கப்பட வேண்டும். தற்போது ஆறு முதல் எட்டுமணி நேரம்வரை மட்டுமே மின்சாரம் வழங்கப்படுகிறது.

**தங்கசாமி(விவசாயி):** விவசாயிகளின் பம்புசெட் கிணறுகள் தூர்வாரி ஆழப்படுத்த புதுக்கோட்டை மாவட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு வரப்பெற்றுள்ளதா?.
டி.ஆர்.ஓ.,: கிணறுகள் தூர்வாரி ஆழப்படுத்தக் கோரி விவசாயிகள் மனு அளித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.
***தீர்த்தார்*(விவசாயி):** நெல் கொள்முதல் செய்வதென்றால் அரசு நிர்ணயித்துள்ள தொகையை விவசாயிகள் அனைவருக்கும் முறையாக வழங்கவேண்டும்.
லெட்சுமணன்(விவசாயி): எனக்கு சொந்தமான விவசாய நிலத்துக்கு பட்டா வழங்கக்கோரி ஆலங்குடி தாசில்தாரை தொடர்புகொண்டபோது அவர் என்னை ஒருமையில் திட்டி விரட்டியடித்தார். இதன்காரணமாக மனதளவில் பாதிக்கப்பட்டுள்ள எனக்கு பட்டா கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**டி.ஆர்.ஓ.,:** விவசாயிகளிடம் மென்மையாக நடந்துகொள்ளவேண்டும், அவர்களின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலனை செய்யவேண்டும் என அதிகாரிகள் அனைவருக்கும் ஏற்கனவே பலமுறை அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இருந்தும் இதுபோன்ற தவறு தொடர்வது வருத்தமளிக்கிறது. ஆலங்குடி தாசில்தார் தவறுகளை திருத்திக்கொள்ளவேண்டும்.

**ராமசாமி(விவசாயி):** காவிரி டெல்டா பகுதிகளான அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற் பயிர்கள் அறுவடை தருவாயில் புகையான் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பாதித்துள்ளனர். புகையான் நோய் பாதிப்பு குறித்து கணக்கெடுப்பு நடத்தி பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் அனைவருக்கும் ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் இழப்பீடு வழங்கவேண்டும்.
**டி.ஆர்.ஓ.,:** புகையான் நோய் தாக்குதல் குறித்து நேரில் ஆய்வு செய்து கணக்கெடுப்பு நடத்தப்படும். இவ்வாறு விவாதம் நடந்தது.

**டி.ஏ.பி., உரம் செயல்விளக்கம்**

ராமநாதபுரம் : மண்டபம் மூப்பன்வலசையில் டி.ஏ.பி., உரம் சம்பந்தமான செயல்விளக்க பயிற்சி நடந்தது. மாவட்ட வேளாண் துணை இயக்குனர் சக்திமோகன், விதைச்சான்று உதவி இயக்குனர் கனகராசன், மண்டபம் வேளாண் உதவி இயக்குனர் சேக் அப்துல்லா பயிற்சி அளித்தனர்.

**பயிர் காப்பீடு கிடைக்கவில்லை : விவசாயிகள் விரக்தி**

தேவிபட்டினம் : சித்தார் கோட்டை பகுதி விவசாயிகளுக்கு கடந்தாண்டுக்கான பயிர் காப்பீடு தொகை வழங்காததால் சிரமமடைந்துள்ளனர்.
இதனால் இவர்கள் நடப்பாண்டில் விவசாயப்பணிகளில் ஈடுபடவில்லை. தேவிபட்டினம் அருகே புல்லங்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் பயிர் காப்பீடு செய்தனர். கடந்தாண்டு பெய்த கனமழையால் பயிர்கள் நீரில் மூழ்கி நாசமானது. விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். காப்பீடு செய்ததால் நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும் இருந்தனர்.ஆனால், இவர்களுக்கு நிவாரணம் வழங்கவில்லை. பல்வேறு வழிகளில் கடன் வாங்கி விவசாயம் செய்த விவசாயிகளால், நடப்பாண்டில் பணியினை தொடர முடியாமல் மாற்று பணிக்கு செல்லும் நிலை ஏற்பட் டுள்ளது.
ஊராட்சி தலைவர் முகம்மது அப்துல் கனி கூறியதாவது: மழை அளவு கருவிகளை வைத்து, நிவாரணம் வழங்குவதை தவிர்த்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் பார்வையிட்டு,முறையான ஆய்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டும், என்றார்.

**பொங்கலுக்கு பின் விலை வீழ்ச்சி செங்கரும்பு விவசாயிகள் விரக்தி**

மேட்டூர்: பொங்கலுக்கு பின் விலை வீழ்ச்சியடைந்ததால் செங்கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர். கொளத்தூர் பகுதியில் விவசாயிகள் மிளகாய் வத்தல், வாழை, கரும்பு, மஞ்சள் உள்பட ஏராளமான தோட்டப்பயிர்கள் சாகுபடி செய்துள்ளனர்.

செங்கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் கடந்த வாரம் பொங்கலை முன்னிட்டு தொடர்ந்து மூன்று நாள் கரும்பு விற்பனை செய்தனர். ஒரு ஜோடி கரும்பு 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. பொதுமக்களுக்கு பண்டிகை கொண்டாட வேண்டும் என்பதால் அதிக விலை கொடுத்து கரும்பு வாங்கி சென்றனர். பொங்கல் முடிந்த பின்னர் செங்கரும்பு விற்பனை மந்தமாகி விட்டது.

செங்கரும்பை தாமதமாக அறுவடை செய்தால் தண்டு பகுதியில் வெடிப்பு ஏற்பட்டு வீணாகி விடும். அதனால், செங்கரும்பை குறிப்பிட்ட காலத்திற்குள் விற்க வேண்டும். பொங்கலுக்கு பின் கரும்பு விற்பனை குறைந்து விட்ட நிலையில், கண்டிப்பாக விற்றாக வேண்டும் என்ற நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

அதனால், கரும்பை குறைந்த விலைக்கு நஷ்டத்திற்கு விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். கொளத்தூர் வாரசந்தையில் நேற்று ஒரு ஜோடி கரும்பை விவசாயிகள் பத்து ரூபாய்க்கு விற்பனை செய்தனர். குறைந்த விலைக்கு விற்றபோதிலும், கரும்பு விற்பனை மந்தமாக இருந்ததால் விவசாயிகள் விரக்தியடைந்தனர்.

**மக்காச்சோளம் கொள்முதல் விலை: விவசாய அதிகாரி**

சிவகங்கை : ""மார்ச்சுக்கு பின், மக்காச்சோளம் விலை மூடைக்கு (100 கிலோ) 1,000 ரூபாயாக இருக்கும்,'' என, விவசாய இணை இயக்குனர் சுப்பிரமணியன் தெரிவித்தார்.
அவர் கூறியதாவது: மாநிலத்தின் பல பகுதிகளில் இருந்து மக்காச்சோளம் வந்த போதும், அதிக ஈரப்பதத்தால், தரம் குறைவாக உள்ளது. தற்போது கோழிப்பண்ணைகள், மக்காச்சோளத்தை இருப்பு வைக்கின்றன. இதனால் விலை உயரும். டிசம்பரில் குவிண்டால் 900 ரூபாய்க்கு விற்றது. வரும் மார்ச்சுக்கு பின், 1,000 ரூபாய் வரை உயரும். இவற்றை கிடங்குகளில் சேமித்து, கூடுதல் விலைக்கு விற்கலாம். தற்போதைய நிலவரம் நீடிக்கும் பட்சத்தில், தைப்பட்டத்தில் அதிகளவு மக்காச்சோளம் விதைக்கலாம். அறுவடை பருவமான மே, ஜூனில் 1,000 ரூபாய் கிடைக்கும், என்றார்.

**உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் வேளாண் அதிகாரி அறிவுரை**

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டை அடுத்த பேராவூரணி வேளாண் உதவி இயக்குனர் கோவிந்தராஜ், உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது குறித்து பல்வேறு யோசனைகளை தெரிவித்துள்ளார். தற்போது தை, மாசி பட்டங்கள் உளுந்து சாகுபடிக்கு ஏற்றதாகும். நடப்பு பட்டத்தில் உளுந்து சாகுபடி செய்ய ஆடுதுறை ஐந்து, வம்பன் மூன்று ஆகிய ரகங்கள் சிறந்தது. ஒரு ஏக்கர் நிலத்தை தொழு உரமிட்டு நான்கு முறை நன்றாக உழவேண்டும். உளுந்துக்கு ரசாயன உரம் இடத் தேவையில்லை. ஆனால், பயிர் நுண்ணுரம் ஐந்து கிலோவுடன் 20 கிலோ மணல் கலந்து கடைசி உழவின் போது மேலாக இட வேண்டும். ஒரு ஏக்கருக்கு எட்டு கிலோ விதை போதுமானது. ஒரு கிலோ விதைக்கு நான்கு கிராம் டிரைக்கோடெர்மாவிரிடி என்ற நோயை கட்டுப்படுத்தும் பூஞ்சாணத்தை கலந்து அத்துடன் பயிர் ரைசோபியம் உயிர் உரத்தை கல்ந்து 24 மணி நேரம் வைத்திருக்க வேண்டும்.

வரிசை, வரிசையாக ஒரு அடி இடைவெளியும், செடிக்கு, செடி கால் அடி இடைவெளியும் இருக்குமாறு விதைப்பு செய்ய வேண்டும். விதைத்த 30வது நாள் களைகளை அகற்ற வேண்டும். பூக்கும் தருணத்தில் 20 மற்றும் 35வது நாளில் இரண்டு முறை நாலரை கிலோ டி.ஏ.பி.,யை பத்து லிட்டர் நீரில் கலந்து 24 மணி நேரத்துக்குப்பின் அக்கரைசலில் மேலாக உள்ள தெளிந்த நீரை வடித்து 190 லிட்டர் தண்ணீரில் கலந்து மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். பயிர் வாடினால் மட்டும் தண்ணீரை மேல்மட்டமாக இறைத்தால் போதும்.
இதேபோல் பூச்சி நோயை கட்டுப்படுத்த, காய் புழுக்களை கட்டுப்படுத்த பேலஸ் சிரஞ்சியான் என்ற எதிர் உயிர்

பேக்ட்ரியாவை ஏக்கருக்கு 400 கிராம் முதல் 600 கிராம் வரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தேளிப்பதன் மூலம் காய்புழுக்கள் மற்றும் இலை உண்ணும் புழுக்களை கட்டுப்படுத்தலாம்.

பூச்சி தாக்குதல் அதிகாமாக இருந்தால் ஏக்கருக்கு 400 மில்லி எண்டோசல்பான் அல்லது குளோரி பைரி பாஸ் 400 மில்லியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் கட்டுப்படுத்தலாம். சாம்பல் மற்றும் வேர் வாடல் நோய் தாக்குதல் தென்பட்டால் 100 கிராம் கார்பன்டிசம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தேளிக்க வேண்டும். இவ்வாறு  சய்வதன் மூலம் ஒரு ஏக்கர் உளுந்து சாகுபடியில் 700 கிலோ முதல் ஒரு டன் வரை மகசூல் பெறலாம்.  தற்போது உளுந்துக்கு நல்ல விலை கிடப்பதாலும், 70 நாட்களில் மகசூல் பெறுவதாலும் உளுந்து சாகுபடி செய்ய விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தஞ்சாவூர் : விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 29ம் தேதி தஞ்சையில் நடைபெறும் என்று கலெக்டர் சண்முகம் தெரிவித்து உள்ளார்.வரும் 29ம்தேதி காலை 10.30 மணிக்கு கலெக்டர் அலுவலக பிரதான கட்டிடத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடக்கிறது. இதில் கலந்து கொள்ளும் முன்னோடி விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்பொறியியல் துறை, நுகர்பொருள் வாணிபக் கழகம், தோட்டக்கலை துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துக்களை மட்டும் தெரிவித்து பயன் பெறலாம். இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கருங்குளம் யூனியனில் வேளாண் அதிகாரி ஆய்வு**

செய்துங்கநல்லூர்: கருங்குளம் யூனியனில் வேளாண்மை துணை இயக்குநர் ஆய்வு செய்தார்.தூத்துக்குடி மாவட்டத்திற்கு வேளாண்மை துணை இயக்குநராக பொறுப்பேற்றுள்ள லூயிஸ் ராஜரத்தினம் கருங்குளம் யூனியன் பகுதிகளில் ஆய்வு செய்ய செய்துங்கநல்லூருக்கு வந்தார். யூனியன் ஆபிஸ் வளாகத்தில் அமைந்துள்ள வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு வந்த அவரை கருங்குளம் வேளாண்மை உதவி இயக்குநர் ராஜன் ரவிச்சந்திரன், வேளா ண்மை அலுவலர் தூஜ்மல்கான் ஆகியோர் வரவேற்றனர்.பின்னர் அவர் அலுவலக பணிகளை ஆய்வு செய்தார்.

அதன்பின் அங்கிருந்து அனவரதநல்லூர் கிராமத்திற்கு வந்து அங்கு அமைக்கப்பட்டிருந்த அனுசரணை ஆராய்ச்சித்திடலை பார்வையிட்டார். பின்னர் வசவப்புரம், முறப்பநாடு கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள செம்மைநெல் சாகுபடி திட்டம் செயல்படுத்தப்படும் வயல்களையும், அடுத்து அருகில் உள்ள வீரிய ஒட்டுநெல் விதைப் பண்ணையையும், கிள்ளிகுளம் தென்னை நாற்றுப்பண்ணைக்கு வருகை தந்த அவர் பண்ணைகளையும் அங்கிருந்து விதை சுற்றிகரிப்பு ஆலைக்கு வந்து பார்வையிட்டு ஆய்வு செய்தார். அவருடன் வேளா ண்மை அலுவலர் ஜோசப், கருங்குளம் வேளாண்மை உதவி இயக்குநர் ராஜன் ரவிச்சந்திரன், வேளா ண்மை அலுவலர் அஜ்மல்கான் ஆகியோர் உடன் சென்றனர்.

**பெருஞ்சாணி அணை மீண்டும் திறப்பு**

நாகர்கோவில்,:குமரி மாவட்டத்தில் கடும் வெயில் சுட்டெரித்து வருகிறது. இந்நிலையில் விவசாயத்திற்காக பெருஞ்சாணி அணை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் இந்த ஆண்டு குமரி நீர் ஆதாரமான பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் நீர்மட்டம் குறைவாகவே உள்ளன. பருவமழை பொய்த்ததும் இதற்கு ஒரு காரணமாகும். பேச்சிப்பாறையில் தற்போது 28.03 அடி நீர்மட்டமும், பெருஞ்சாணியில் 51.55 அடி நீர்மட்டமும் உள்ளது. சித்தாறு ஒன்றில் 7.12 அடியும், சித்தார் இரண்டில் 7.21 அடியும், பொய்கையில் 1.30 அடி நீர்மட்டமும் உள்ளது.

கடந்த ஆண்டு இதே நாளில் பேச்சிப்பாறையில் 39.35 அடியும், பெருஞ்சாணியில் 64 அடி தண்ணீரும் நீர்மட்டம் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பேச்சிப்பாறைக்கு வினாடிக்கு 561 கன அடி தண்ணீர் உள்வரத்தாக வந்துகொண்டிருக்கிறது. பெருஞ்சாணியில் 44 கனஅடி தண்ணீர் உள்வரத்து வருகிறது. விவசாய பாசனத்திற்காக பேச்சிப்பாறை அணையிலிருந்து விநாடிக்கு 776 கனஅடி தண்ணீர் வெளியேறிக்கொண்டிருக்கிறது. அடைக்கப்பட்டிருந்த பெருஞ்சாணி அணை நெற்பயிர்களின் பாசன வசதிக்காக நேற்று திறக்கப்பட்டது. பெருஞ்சாணி அணையில் இருந்து விநாடிக்கு 228 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

**சிற்றாறு மற்றும் துணை ஆறுகளில்ரூ.4.25 கோடியில் 17 தடுப்பணைகள்:5 தாலுகா விவசாயிகள் பயன்**

திருநெல்வேலி:சிற்றாற்றில் 4.25 கோடி ரூபாய் செலவில் 17 தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. இதன் மூலம் 5 தாலுகா பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் பயன் பெறுகின்றனர்.குடிநீர் ஆதாரத்தை பெருக்கவும், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், கால்நடைகளுக்கு பயன் கிடைக்கவும் வகையில் சிற்றாறு மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் தடுப்பணைகளை கட்ட அரசு முடிவு செய்துள்ளது.இதில் சிற்றாற்றின் குறுக்கே 8 தடுப்பு அணைகள் கட்டப்படுகின்றன.

மேலும், சிற்றாற்றின் துணை ஆறுகளான அரிகரா நதி, முக்கரபிள்ளை ஓடை, பெரியகான் கால் ஓடை, எலுமிச்சையாறு, ஒச்சன் ஓடை, அடவிக்காட்டு கால், கொடைக்கால் ஆகியவற்றில் தலா ஒன்று, புலியோடையில் 2 உட்பட 9 தடுப்பு அணைகள் கட்டப்படுகின்றன.சிற்றாறு மற்றும் அதன் துணை ஆறுகளில் மொத்தம் 4.25 கோடி ரூபாய் மதிப்பில் 17 தடுப்பு அணைகள் கட்டப்பட உள்ளது. இப்பணிகளுக்கு டெண்டர் விடும் பணிகள் முடிவடைந்துள்ளது. ஒரு வாரத்தில் பணிகள் ஆரம்பமாகி வரும் ஏப்ரல் மாதத்திற்குள் பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.இந்த தடுப்பணைகள் மூலம் தென்காசி, செங்கோட்டை, வீ.கே புதூர், ஆலங்குளம், நெல்லை ஆகிய தாலுகா பகுதிகளில் நிலத்தடி நீர் உயர்வதோடு கால்நடைகளுக்கு பெரிதும் பயன் கிடைக்கும். கிணறுகளிலும் நீர்மட்டம் கணிசமாக அதிகரிக்கும். இந்த தாலுகா பகுதிகளில் உள்ள புன்செய் நிலங்கள் இத்தடுப்பணைகள் மூலம் பயன் பெறும்.

**மழை பெய்தும் மானாவாரி குளங்களில் நீர் இல்லை:10 ஆயிரம் எக்டேரில் நெல் சாகுபடி கடும் பாதிப்பு**

திருநெல்வேலி:மழை பெய்தும் மானாவாரி குளங்களில் தண்ணீர் இல்லாததால் நெல்லை மாவட்டத்தில் 10 ஆயிரம் எக்டேரில் நெல் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.நெல்லை மாவட்டத்தில் இந்த ஜனவரி மாதத்தில் இதுவரை 29.91 மி.மீ மழை பெய்துள்ளது. இது இயல்பான மழை அளவை விட 40 சதவீதம் குறைவு ஆகும்.அணைக் கட்டுகளில் 12 ஆயிரத்து 857 மி.க.அடி கொள்ளவு (93 சதவீதம்) தண்ணீர் உள்ளது. கடந்த ஆண்டில் இதே காலத்தில் 11 ஆயிரத்து 42 மி.க.அடி கொள்ளளவு (80 சதவீதம்) நீர் இருந்தது.மாவட்டத்தில் 1,049 குளங்களில் 2 மாதங்களுக்கும், 1,400 குளங்களில் ஒரு மாதத்திற்கும் தண்ணீர் இருப்பு இருக்கும் என எதிபார்க்கப்படுகிறது.

கடந்த டிசம்பர் மாதம் வரை பெய்த மழை அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் அதிக அளவு இருந்ததால் அணைக் கட்டுகளில் நீர் நிலை நன்றாக உள்ளது. ஆனால் மானாவாரி குளங்களில் குறிப்பிடத்தக்க அளவில் நீர் பெருகவில்லை. கிணறுகளில் சராசரியாக 4 மணி முதல் 10 மணி நேரம் பாசனம் மேற்கொள்ளும் அளவிற்கு நீர் உள்ளது.மாவட்டத்தில் 2009-10ம் ஆண்டில் 1 லட்சத்து 37 ஆயிரத்து 800 எக்டேர் பரப்பில் பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில் நேற்று முன்தினம் வரை 1 லட்சத்து 20 ஆயிரத்து 684 எக்டேர் பரப்பில் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆனால் கடந்த ஆண்டில் இதே கால கட்டத்தில் 1 லட்சத்து 36 ஆயிரத்து 317 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டிருந்தது.மாவட்டத்தில் பிசான நெல் நடவு பணி முடியும் நிலையில் உள்ளது. இதுவரை 67 ஆயிரத்து 6 எக்டேரில் பிசான நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. மானாவாரி குளங்களில் போதுமான தண்ணீர்

இல்லாத சூழ்நிலையில் மொத்த நெல் சாகுபடி பரப்பு இலக்கான 77 ஆயிரம் எக்டேரில் 10 ஆயிரம் எக்டேர் பரப்பு குறைவாக சாகுபடியாக வாய்ப்புள்ளது.

**விதை கிராம திட்டம் மேல்நகரில் துவக்கம்**

கண்ணமங்கலம் :  மணிலா விதை கிராம திட்ட துவக்க விழா மேல்நகரில் நடந்தது. மேல்நகர் பஞ்., துணைத்தலைவர் ரமேஷ் தலைமை வகிக்க, விவசாய ஆர்வலர் சங்கத் தலைவர் ரவி முன்னிலை வகித்தார். ஆரணி வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ், மேல்நகரில் விதை கிராம திட்டத்தின் கீழ் மணிலா சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மகசூலை அதிகரிக்கும் தொழில்நுட்ப பயிற்சியளித்தார். அருகே இருந்த நிலக்கடலை வயலில் செயல் விளக்கம் செய்து காட்டினார். முதல் கட்டமாக நடந்த பயிற்சி முகாமில் செல்வராஜ் பேசியதாவது:விவசாயிகள் அவர்களுக்கு தேவையான விதைகளை உற்பத்தி செய்வதற்கான யுக்திகளை தெரிந்துகொள்ள வேண்டும். விதைநேர்த்தி மூலம் விதையின் முளைப்புத்திறன் அதிகரிப்பதற்கு, நோய் தாக்குதலில் இருந்து பாதுகாக்கின்றது. இதனால் பயிர் பராமரிக்கப்படும், மகசூல் அதிகரிக்கிறது.

மணிலா பயிரில் ஏற் படும் வேர் அழுகல் நோயை தவிர்க்க விதையினை டிரைகோ டெர்மா விரிடி என்ற பூஞ்சானக் கொல்லி மருந்தினை விதை நேர்த்தி செய்து விதைப்பு மேற் கொள்ளவேண்டும்.மணிலா மகசூலை அதிகரிக்க தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மான்ய விலையில் வழங்கப்படும் ஊட்டச்சத்துக்கள் அடங்கிய கிட்டுகளை பெற்று, மணிலா விதைப்பு செய்த 25, 35 நாட்களில் தெளித்தால், கால்கள், திரட்சியாகவும், எடை அதிகரித்தும் காணப்படும். களை எடுத்த பின்பு வேளாண்மை விரிவாக்க மையங்களில் மான்ய விலையில் ஜிப்சம் உரம் பெற்று இடுவதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம்.

செயல்விளக்க வயலில் தரமான விதை, ஈரப்பதத்துடன் விதை நேர்த்தி செய்து நட்டால் ஒரு மீட்டர் சுற்றளவில் 33 செடிகள் முளைக்கும். இங்கு நாலைந்து செடிகளே உள்ளது என தெரிவித்தார். முதல் கட்ட பயிற்சியில் 50 விவசாயிகள் கலந்துகொண்டனர். மேலும் 2 பயிற்சி முகாம்கள் நடக்க உள்ளது. பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு 50 சத மானிய விலையில் மணிலா விதை வழங்கப்பட்டது.பயிற்சி முகாமில் உதவி வேளாண்மை அலுவலர் வெங்கடேசன்,  கண்ணன், ராமமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திருமூர்த்தி அணையில் திறந்து விடப்பட்டது**

உடுமலை : பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்திற்கு திருமூர்த்தி அணையில் இருந்து நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம், கோவை, திருப்பூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட 97 ஆயிரத்து 522 ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகிறது. பி.ஏ.பி., திட்டத்தின் மூலம் கோவை, திருப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட 3 லட்சத்து 77 ஆயிரத்து 152 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. பாசன நிலங்கள் நான்கு ண்டலங்களாக பிரிக்கப்பட்டு, ஆறு மாதத்திற்கு ஒரு மண்டல பாசன காலமாக வைத்து, 135 நாட்களுக்கு சுழற்சி முறையில் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்திற்கு, 2009 ஆக., 23ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டு; 2010 ஜன., 4ம் தேதி பாசனம் நிறைவு செய்யப்பட்டது. பி.ஏ.பி., விவசாயிகள் மற்றும் அணைகளின் நீர் இருப்பை கணக்கிட்டு அதிகாரிகளின் பரிந்துரை அடிப்படையில், பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனம் ஜன.,22 ல் துவக்க அரசு உத்தரவிட்டது.

இதனையடுத்து, திருமூர்த்தி அணையிலிருந்து, பி.ஏ.பி., பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டது. உதவி செயற்பொறியாளர் கிருஷ்ணகுமார், ராதாகிருஷ்ணன், உதவி பொறியாளர்கள் தருமன் உட்பட விவசாயிகள் பங்கேற்றனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி தாலுகாவில் உள்ள 12,567 ஏக்கர் நிலங்களும், சூலூர் தாலுகாவில் 4,033 ஏக்கர், திருப்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட உடுமலை தாலுகாவில் 34,938 ஏக்கர், தாராபுரம் தாலுகாவில் 8,395 ஏக்கர்; பல்லடம் தாலுகாவில் 7,887 ஏக்கர்; திருப்பூர் 11,234 ஏக்கர்; காங்கேயம் தாலுகாவில் 15,392 ஏக்கர் நிலங்கள் என மொத்தம் 94,446 ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகின்றன. 135 நாள் மண்டல பாசன காலத்தில், 90 நாட்கள் , சுற்றுக்கள் அடிப்படையில் , 9,012 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்கப்படுகிறது.

தளி வாய்க்கால் பாசன பகுதிகளுக்கும் நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. தினைக்குளம், செட்டிக்குளம், செங்குளம், கரிசல்குளம், அம்மாபட்டி, பெரியகுளம், ஒட்டுக்குளம், வளையபாளையம்குளம் ஆகியவற்றுக்கு மூன்று முறை நிரம்பி, 390 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்கப்படுகிறது. இதன் மூலம், 3076.36 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

நிரம்பிய நிலையில் அணை :  தண்ணீர் திறக்கும் போது திருமூர்த்தி அணை நீர் மட்டம் மொத்தமுள்ள 60 அடியில் 59.61 அடியாக இருந்தது. அணை நீர் இருப்பு 1,918.91 மில்லியன் கன அடியாக இருந்தது. நீர் வரத்து வினாடிக்கு 459 கன அடியாக இருந்தது. தொகுப்பு அணைகளிலில் இருந்து காண்டூர் கால்வாய் வழியாக நீர் வரத்து நிலவியதால், அணை மொத்த கொள்ளளவையும் எந்நேரமும் எட்டும் நிலையில் இருந்தது.

அணை முழு கொள்ளளவை எட்ட ஒரு சில நிமிடங்கள் இருக்கும் போது, பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்கப் பட்டது. தண்ணீர் திறக்கும் அளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, பிரதான கால்வாயில் வினாடிக்கு 926 கன அடி நீர் திறந்து விடப் பட்டது.

**உடுமலையில் தரமற்ற விதை விற்பனை: விவசாயிகள் புகார்**

உடுமலை : "உடுமலை பகுதியில் தரமற்ற விதை விற்பனை, உரங்களில் கலப்படத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்', என குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.உடுமலை வருவாய் கோட்டத் தின் முதல் விவசாயிகள் குறைதீர் கூட்டம் கோட்டாட்சியர் சோமசேகரன் தலைமையில் நேற்று தாலுகா அலுவலகத்தில் நடந்தது.

விவசாயிகள் பேசியதாவது:பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப் பட்டு சாகுபடி பணிகள் துவங்கியுள்ளது. சீசன் துவங்கியதும் உரங்களுக்கு செயற்கை தட்டுப் பாடு ஏற்படுத்தி விலையை தாறுமாறாக தனியார் விற்பனையாளர்கள் உயர்த்துகின்றனர். உடுமலை பகுதியில் சில ஆண்டுகளாக இப்பிரச்னை தொடர்கதையாக உள்ளது.

மண் புழு உரங்களில் கலப்படம் செய்து விற்பதால் பல பாதிப்புகள் ஏற்படுகிறது. விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உரங்களையும் கூட்டுறவு சங்கத்தில் இருப்பு வைக்க வேண்டும்.சாகுபடி பரப்பை கணக்கிட்டு டி.ஏ.பி., போன்ற உரங்கள் தட்டுப் பாடு இல்லாமல் கிடைக்க செய்ய வேண்டும். கொப்பரை கொள்முதலை நிறுத்தக்கூடாது.

இயற்கை சீற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளுக்கு நிவாரணம் கிடைப்பதில்லை. பலத்த காற்றால் சாய்ந்த தென்னை மரங்களுக்கு பல முறை மனு அளித்தும் பலன் இல்லை.சாகுபடியை காப்பீடு செய்து தனி விவசாயி பாதிக்கப்பட்டாலும் நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வண்டும். மக்காச்சோள அறுவடை பணிகள் தற்போது நடக்கிறது. அறுவடை துவங்கிய சில நாட்களில் விலை வீழ்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நிலையான விலை கிடைக்க வேளாண் விற்பனை குழு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் விளைபொருட்களை இருப்பு வைத்துள்ள விவசாயிகளின் தகவல்களை தெரிவித்தால் வியாபாரிகள் களம் மற்றும் குடோன்களை பயன்படுத்துவது தடுக்கப்படும்.பூச்சி மருந்துகளில் கலப்படம் செய்யப்படுவதால் பயிர்கள் பாதிப்பிற்குள்ளாகின்றன.

குளங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்காமல் நிலத்தடி நீர் மட்டம் பாதிக்கப்படுகிறது.வேலைஉறுதியளிப்பு திட்ட பணியாளர்களை சிறு, குறு விவசாய பணிகளுக்கு பயன்படுத்தி கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். அமராவதி அணைக்கு முக்கிய நீர் வரத்து அளிக்கும் பாம்பாற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்டுவதை தடுக்க வேண்டும், என விவசாயிகள் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

வேளாண் உதவி இயக்குநர் சைலஸ் பேசியதாவது:கொப்பரை கொள்முதல் மார்ச் இறுதி வரை மேற்கொள்ள அரசு உத்தரவிட்டுள்ளது. அடுத்தகட்டமாக கூடுதல் விலையில் கொள்முதல் மேற்கொள்ள ஆய்வு குழு அமைக்கப்பட்டுள்ளது. தரமற்ற விதை, கலப்பட உரம் குறித்த புகார்களை விவசாயிகள் நேரடியாக தெரிவிக்க வேண்டும் என்றார்.

நகராட்சி தலைவர் வேலுச்சாமி: உடுமலை பகுதியில் உரத்தட்டுப் பாடு மற்றும் தரமற்ற விதைகள் பிரச்னை ஏற்படாமல் இருக்க வேளாண்துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு செய்து பிரச்னைக்கு தீர்வு காணவேண்டும். துறை அதிகாரிகள் இதற்கான வழிகாட்டுதல் களை மாவட்ட நிர்வாகத்திடமிருந்து பெற வேண்டும் என்றார்.

எம்.எல்.ஏ., சண்முகவேலு: விவசாயிகள் அளிக்கும் மனுக்களுக்கு அதிகாரிகள் உரிய பதில் அளிப்பதில்லை. உரிய விளக்கங்களை அளித்தால் மட்டுமே குறைதீர் கூட்டங்களுக்கு வரும் விவசாயிகளின் எண்ணிக்கை குறையும் என்றார். தாசில்தார்கள் கணபதி, லியாகத் அலி, வேளாண்துறை உதவி இயக்குனர்கள் சைலஸ், பொன் முடி, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன் பங்கேற்றனர்.

---

தினகரன்

### நீர், நிலவள திட்ட விழிப்புணர்வு பிரசாரம்

பதிவு செய்த நாள் 1/23/2010 4:44:49 AM

ராஜபாளையம்: ராஜபாளையத்தில், நீர் வள, நில வளத் திட்டம் குறித்து விவசாயிகளுக்கு தெருமுனை பிரசாரம் நடந்தது. மதுரை ராஜா கடைத்தெருவில் நடைபெற்ற இந்த பிரசாரத்தில் அழகிரிசாமி (பொதுப்பணித்துறை), சுந்தரமூர்த்தி (நீர்வள ஆதாரத்துறை), ரவிச்சந்திரன் (பாசன மேலாண்மை பயிற்சி நிலையம்), தனலட்சுமி (வேளாண்மைத்துறை), குருநாதன் (தோட்டக்கலைத்துறை), பாலசுப்பிரமணியன் (வேளாண் விற்பனை மையம்), சந்திரமணி (மீன் வளத்துறை) மாரிமுத்து (வேளாண்மை பல்கலை.,) உட்பட அதிகாரிகள் பங்கேற்றனர். அவர்கள் தங்கள் துறை சார்பிலான திட்டங்கள் குறித்து விளக்கி பேசினர். கொண்டைநேரி, கடம்பன்குளம் அலப்பசேரி, மருங்கூர், திருச்சாலூர் கண்மாய் விவசாயிகள் இதில் பங்கேற்று விளக்கம் கேட்டறிந்தனர்.

### தூத்துக்குடியில் அலங்கார மீன்வளர்ப்பு பயிற்சி

பதிவு செய்த நாள் 1/23/2010 4:51:48 AM

தூத்துக்குடி: தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி யில் நன்னீர் அலங்கார மீன்வளர்ப்பு பயிற்சி நடந்தது. தூத்துக்குடி மீன்வளக்கல்லூரியில் நன்னீர் அலங் கார மீன்வளர்ப்பு மற்றும் அதனை சந்தைப்படுத்தும் முறைகள் குறித்த 3 நாள் பயிற்சி நடந்தது. பயிற்சியை கல்லூரி முதல்வர் ஜேம்சன் துவக்கி வைத்தார். இதில் நன்னீர் அலங்கார மீன் வகைகள், மீன்தொட்டி வடிவமைத்தல், நோய்கள், தடுப்பு முறைகள் குறித்து செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

தொடர்ந்து இப்பயிற்சி குறித்த கையேட்டை கல் லூரி முதல்வர் ஜேம்சன் வெளியிட இணை பேராசிரி யர்கள் நாகூர்மீரான், சுஜாத்குமார், சாந்தகுமார் ஆகி யோர் பெற்றுக்கொண்ட னர். ஏற்பாடுகளை உதவி பேராசிரியர் அருள்ஒளி செய்திருந்தார்.